வகுப்பு : 8-ம் வகுப்பு

பாடம் : தமிழ்

## இயல் - 8

## 1. ஒன்றே குலம்

**I. குறுவினா.**

**1. யாருக்கு எமனைப்பற்றிய அச்சம் இல்லை?**

மனிதர் அனைவரும் ஒரே இனத்தினர். உலகைக் காக்கும் இறைவனும் ஒருவனே. இக்கருத்துகளை நன்றாய் மனத்தில் நிறுத்துபவர்களுக்கு எமனைப்பற்றிய அச்சம் தேவை இல்லை.

**2. மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழ விரும்புபவர் செய்ய வேண்டியது யாது?**

மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழ விரும்புபவர், மனிதர் அனைவரும் ஒரே இனத்தவர் என்றும், உலகைக் காக்கும் இறைவனும் ஒருவனே என்றும் நன்றாய் மனத்தில் நிறுத்த வேண்டும்.

**II. சிறுவினா.**

**1. மக்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டு குறித்துத் திருமூலர் கூறுவன யாது?**

படங்கள் அமைந்த மாடங்களையுடைய கோவிலில் வீற்றிருக்கும் இறைவனுக்கு ஒரு பொருளைக் காணிக்கையாய்ச் செலுத்தினால் அது நடமாடும் கோவிலாகிய உடம்பையுடைய அடியார்களுக்குச் சேராது. அடியார்களாகிய மக்களுக்குக் கொடுப்பது கோவிலில் இருக்கும் இறைவனுக்குச் சேரும் என்று திருமூலர் கூறுகிறார்.

**III. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அறநெறியில் வாழ்பவர்கள், உயிரைக் கவர வரும் ___________க் கண்டு அஞ்சமாட்டார்கள்.

அ. புலனை ஆ. அறனை **இ. நமனை** ஈ. பலனை

2. ஒன்றே ___________ என்று கருதி வாழ்வதே மனிதப்பண்பாகும்.

**அ. குலம்** ஆ. குளம் இ. குணம் ஈ. குடம்

3. 'நமனில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன ___________.

அ. நம் + இல்லை ஆ. நமது + இல்லை

இ. நமன் + நில்லை **ஈ. நமன் + இல்லை**

4. நம்பர்க்கு + அங்கு என்பனவற்றைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ___________.

அ. நம்பரங்கு ஆ. நம்மார்க்கு

**இ. நம்பர்க்கங்கு** ஈ. நம்பங்கு

5. நடம் + ஆட என்பனவற்றைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ___________.

அ. நடனமாட ஆ. நடம்ஆட

**இ. நடமாட** ஈ. நடமட

6. பகவற்கு + ஒன்று என்பனவற்றைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ___________.

**அ. பகவற்கொன்று** ஆ. பகவகொன்று

இ. பகவாற்கு ஒன்று ஈ. பகவற்கு ஒன்று

Pinkz Public School
Next Generation School

**IV. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. திருமந்திரம் ____________ பாடல்களைக் கொண்டது.

   **மூவாயிரம்**

2. தமிழ் மூவாயிரம் என்று வழங்கப்படும் நூல் ____________.

   **திருமந்திரம்**

## 2. மெய்ஞ்ஞான ஒளி

**I. குறுவினா.**

**1. உண்மை அறிவை உணர்ந்தோர் உள்ளத்தில் நிகழ்வது யாது?**

உண்மை அறிவினை உணர்த்தவர்களின் உள்ளத்துக்குள் இன்பப்பெருக்காய், கரை கடந்து பொங்கிடும் கடலாய் மேலான பரம்பொருள் விளங்குகின்றது.

**2. மனிதனின் மனம் கலங்கக் காரணமாய் அமைவது யாது?**

மனிதனின் மனம் கலங்க காரணமாய் அமைவது, உண்மையான அறிவு ஒளி ஆனவனின் திருவடிகளின்மேல் பற்று வைக்காமல், பணத்தின்மீது ஆசை வைப்பதே ஆகும்.

**II. சிறுவினா.**

**1. குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுவன யாவை?**

தம் தீய எண்ணங்களை அடியோடு அழித்தவர்கள் மனத்துள்ளே எழுந்தருளி இருக்கும் மேலான பொருளே! உண்மையான அறிவு ஒளி ஆனவனே! உன் திருவடிகளின் மேல் பற்று வைக்காமல் பணத்தின்மீது ஆசை வைத்ததால் நான் மனம் கலங்கி அலைகின்றேன்.

நீ உண்மை அறிவினை உணர்ந்தவர்களின் உள்ளத்துக்குள் இன்பப்பெருக்காய்க் கரை கடந்து பொங்கிடும் கடலாய் விளங்குகின்றாய்.

மேலான பொருளே! ஐம்பொறிகளை அடக்கி ஆள்வது மிகவும் அரிய செயலாகும்.

அப்பொறிகளின் இயல்பை உணர்ந்து நல்வழிப்படுத்தும் அறிவினை எனக்குத் தந்து அருள் செய்வாயாக.

**III. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மனிதர்கள் தம் ___________ தீய வழியில் செல்ல விடாமல் காக்க வேண்டும்.

   அ. ஐந்திணைகளை ஆ. அறுசுவைகளை

   இ. நாற்றிசைகளை **ஈ. ஐம்பொறிகளை**

2. ஞானியர் சிறந்த கருத்துகளை மக்களிடம் ___________.

   **அ. பகர்ந்தனர்** ஆ. நுகர்ந்தனர்

   இ. சிறந்தனர் ஈ. துறந்தனர்

3. 'ஆனந்தவெள்ளம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன ___________.

   அ. ஆனந்த + வெள்ளம் ஆ. ஆனந்தன் + வெள்ளம்

   **இ. ஆனந்தம் + வெள்ளம்** ஈ. ஆனந்தர் + வெள்ளம்

4. உள் + இருக்கும் என்பனவற்றைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ___________.

   அ. உள்ளேயிருக்கும் **ஆ. உள்ளிருக்கும்**

   இ. உளிருக்கும் ஈ. உளருக்கும்

5. 'கரையறவே' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன ___________.

   அ. கரை + யறவே **ஆ. கரை + அறவே**

   இ. கரையா + அறவே ஈ. கரா + அறவே

6. 'ஐம்பொறி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன

______________.

**அ. ஐந்து + பொறி** ஆ. ஐ + பொறி

இ. ஐம் + பொறி ஈ. ஐந்த் + பொறி

**IV. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. "மெய்ஞ்ஞானஒளி" என்னும் குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல் ______________ என்னும் தொகுப்பில் உள்ளது.

**குணங்குடியார் பாடற்கோவை**

2. "ஐம்பொறியைக் கட்டிப் படிக்கப் படிப்பு எனக்குப் பகராய் பராபரமே! என்று பாடியவர் ______________.

**குணங்குடி மஸ்தான் சாகிபு.**

Pinkz Public School
Next Generation School

## 3. அயோத்திதாசர் சிந்தனைகள்

**I. குறுவினா.**

**1. அயோத்திதாசரிடம் இருந்து ஐந்து பண்புகள் யாவை?**

நல்ல சிந்தனை, சிறப்பான செயல், உயர்வான பேச்சு, உவப்பான எழுத்து, பாராட்டத்தக்க உழைப்பு ஆகிய ஐந்து பண்புகளையும் ஒருசேரப் பெற்ற சிந்தனையாளர் தாம் அயோத்திதாசர்.

**2. சிறந்த வழிகாட்டி ஒருவர் எவ்வாறு இருக்க வேண்டும் என அயோத்திதாசர் கூறுகிறார்?**

ஒரு நாட்டுக்கு வழிகாட்டும் தலைவர் எத்தகையவராய் இருக்க வேண்டும் என்பதை அயோத்திதாசர் விளக்குகிறார். "மக்களும் அவர்தம் நோக்கங்களும் பெருமைப்படத் தக்கனவாய் இருக்க வேண்டுமானால், அவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாய் ஒருவர் அமைய வேண்டும். அவர், மக்களுள் மாமனிதராய், அறிவாற்றல் பெற்றவராய், நன்னெறியைக் கடைப்பிடிப்பவராய் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட தலைவரை வணக்கத்திற்கு உரியவராய் மக்கள் ஏற்பார்கள்; கடவுளெனத் துதிப்பார்கள்" என்று அயோத்திதாசர் கூறுகிறார்.

**3. திராவிட மகாஜன சங்கம் எவற்றுக்காகப் போராடியது?**

அயோத்திதாசர் தம் கொள்கைகளை வலியுறுத்தவும், ஒடுக்கப்பட்டோர் உரிமைகளைப் பாதுகாக்கவும் 1892-ஆம் ஆண்டு திராவிட மகாஜன சங்கம் என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார். இவ்வமைப்பு, சாலைகள் அமைத்தல், கால்வாய்கள் பராமரித்தல், குடிகளின் பாதுகாப்புக்குத் காவல்துறையினரை நியமித்தல், பொது

மருத்துவமனைகள் அமைத்தல், சிற்றூர்தோறும் கல்விக்கூடங்கள் ஏற்படுத்துதல் போன்றவற்றுக்காகவும் போராடியது.

**II. சிறுவினா.**

**1. அயோத்திதாசரின் இதழ்ப்பணிபற்றி எழுதுக.**

அயோத்திதாசர் 1907ஆம் ஆண்டு சென்னையில் ஒருபைசாத்தமிழன் என்னும் வாரஇதழைக் காலணா விலையில் தொடங்கினார். ஓர் ஆண்டிற்குப்பின் அவ்விதழின் பெயரைத் தமிழன் என மாற்றினார். உயர்நிலையையும் இடைநிலையையும் கடைநிலையையும் பாகுபடுத்தி அறியமுடியாத மக்களுக்கு நீதி, நேர்மை, சரியான பாதை ஆகியவற்றைத் தெளிவுபடுத்துவதே இவ்விதழின் நோக்கம் என்றும் அயோத்திதாசர் குறிப்பிட்டார். இவர் 'தமிழன்' இதழ்மூலம் தமிழ்நாடு மட்டுமன்றி மைசூர், கோலார், ஐதராபாத் இரங்கூன், மலேசியா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழ்ந்த தமிழர்களுக்கும் பகுத்தறிவுச்சிந்தனை, இன உணர்வு, சமூகச்சிந்தனை ஆகியவற்றை ஊட்டினார். இவர் தம் நூல்கள் மூலமாகவும் தம் சீர்திருத்தச் சிந்தனைகளை வெளியிட்டார்.

**2. அரசியல் விடுதலைபற்றிய அயோத்திதாசரின் கருத்துகள் யாவை?**

விடுதலை என்பது வெறும் ஆட்சி மாற்றம் மட்டுமன்று; அது மக்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவதாய் அமைய வேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து. "சுயராஜ்ஜியத்தின் நோக்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாய் மட்டும் இருக்கக்கூடாது; மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியையும் உள்ளடக்கியதாய் அஃது

அமைய வேண்டும். மக்கள் வாழ்க்கையில் மாற்றம் உண்டானால் ஒழிய, நாடு முன்னேற முடியாது" என்று ஆணித்தரமாய்க் கூறினார், அயோத்திதாசர்.

**III**. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அயோத்திதாசர் ______________ சமூகச் சீர்த்திருத்தின் தந்தை என்று போற்றப்படுகிறார்.

   அ. தமிழக　　　ஆ. இந்திய

   **இ. தென்னிந்திய**　　　ஈ. ஆசிய

2. அயோத்திதாசர் நடத்திய இதழ் ______________.

   **அ. ஒருபைசாத் தமிழன்**　　　ஆ. காலணாத் தமிழன்

   இ. அரைப்பைசாத் தமிழன்　　　ஈ. அரையாணாத் தமிழன்

3. கல்வியோடு ______________ கற்க வேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து.

   அ. சிலம்பமும்　　　**ஆ. கைத்தொழிலும்**

   இ. கணிப்பொறியும்　　　ஈ. போர்த்தொழிலும்

4. அயோத்திதாசரின் புதுமையான சிந்தனைகளுக்கு அடித்தளமாய் அமைந்தது அவரது ______________.

   **அ. ஆழ்ந்த படிப்பு**　　　ஆ. வெளிநாட்டுப்பயணம்

   இ. இதழியில் பட்டறிவு　　　ஈ. மொழிப்புலமை

5. மக்களின் ஒழுக்கத்துடன் தொடர்புடையது ______________.

   **அ. வானம்**　　　ஆ. கடல்

   இ. மழை　　　ஈ. கதிரவன்

6. அயோத்திதாசர் பிறந்த ஆண்டு ______________.

அ. 1845 ஆ. 1855

இ. 1865 ஈ. 1875

IV. **கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. அயோத்திதாசரின் இயற்பெயர் ______________ என்பதாகும்.

**காத்தவராயன்**

2. பர்மாத் தமிழர்களின் உரிமைகளுக்காகப் பாடுபட்டவர் ________.

**அயோத்திதாசர்**

3. திருவள்ளுவர், ஔவையார் ஆகியோரின் படைப்புகளுக்குப் பௌத்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் புதிய விளக்கங்களை எழுதியவர் ______________.

**அயோத்திதாசர்**

4. சென்னை, தாம்பரத்தில் உள்ள சித்த ஆராய்ச்சி மையத்துடன் இணைந்த மருத்துவமனைக்கு ______________ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**அயோத்திதாச பண்டிதர் மருத்துவமனை.**

Next Generation School

## 5. யாப்பு இலக்கணம்

**I. சிறுவினா.**

**1. இருவகை அசைகளையும் விளக்குக.**

எழுத்துக்கள் ஒன்றோ பலவோ சேர்ந்து அமைவது, அசை. அது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

குறில் தனித்தும், குறில் ஒற்று அடுத்தும், நெடில் தனித்தும், நெடில் ஒற்று அடுத்தும் அமைவது நேரசையாகும்.

எ.கா: அ, அல்; ஆ, ஆல்.

இரு குறில் எழுத்துக்கள் இணைந்தும், இருகுறில் இணைந்தும் ஒற்றடுத்தும், குறில்நெடில் எழுத்துக்கள் இணைந்தும் குறில்நெடில் இணைந்து ஒற்றடுத்தும் வருவது நிரையசையாகும்.

எ.கா: கட, கடல்; கடா, கடாம்,

**2. தலை என்பது யாது?**

சீர்கள் ஒன்றோடு ஒன்று பொருந்துவதைத் தளை என்பர். நின்ற சீரின் இறுதி அசையும் வரும் சீரின் முதல் அசையும் ஒன்றியும் ஒன்றாமலும் அமைவது தளை எனப்படும். தளைகள் ஏழு வகைப்படும்.

**3. அந்தாதி என்றால் என்ன?**

ஒரு பாடலின் இறுதிச்சீரோ அடியின் இறுதிப்பகுதியோ அடுத்த பாடலின் முதல்சீராய் அல்லது முதல் அடியாய் அமையுமாறு பாடப்படுவது அந்தாதித் தொடையாகும்.

**4. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

பா நான்கு வகைப்படும். அவை வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.

- வெண்பா செப்பல் ஓசை உடையது. அறநூல்கள் பலவும் வெண்பாவால் அமைந்தவை.
- ஆசிரியப்பா அகவல் ஓசை உடையது. சங்க இலக்கியங்கள் பலவும் ஆசிரியப்பாவால் அமைந்தவை.
- கலிப்பா துள்ளல் ஓசை உடையது. கலித்தொகை கலிப்பாவால் ஆனது.
- வஞ்சிப்பா தூங்கல் ஓசை உடையது.

**II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அசை ________________ வகைப்படும்.

   **அ. இரண்டு** ஆ. மூன்று

   இ. நான்கு ஈ. ஐந்து

2. விடும் என்பது ________________ சீர்.

   அ. நேரசை **ஆ. நிரையசை**

   இ. மூவசை ஈ. நாலசை

3. அடி ________________ வகைப்படும்.

   அ. இரண்டு ஆ. நான்கு

   இ. எட்டு **ஈ. ஐந்து**

4. முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ________________.

   அ. எதுகை ஆ. இயைபு

   இ. அந்தாதி **ஈ. மோனை**

5. இலக்கணத்திற்கு உட்பட்டு எழுதப்படும் கவிதை ______________.

அ. புதுக்கவிதை **ஆ. மரபுக்கவிதை**

இ. வசனகவிதை ஈ. ஹைக்கூ கவிதை

6. இலக்கணக் கட்டுப்பாடுகளின்றிக் கருத்துகளுக்கு மட்டும் முதன்மை கொடுத்து எழுதப்படுவது ________________.

அ. மரபுக்கவிதை ஆ. வசனகவிதை

இ. ஹைக்கூ கவிதை **ஈ. புதுக்கவிதை**

7. மரபுக்கவிதைகள் எழுதுவதற்கான இலக்கணம் ________________ எனப்படும்.

அ. எழுத்து இலக்கணம் ஆ. சொல் இலக்கணம்

**இ. யாப்பு இலக்கணம்** ஈ. பொருள் இலக்கணம்

8. இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ________________.

**அ. எதுகை** ஆ. மோனை

இ. இயைபு ஈ. முரண்

9. இறுதி எழுத்து அல்லது இறுதி ஓசை ஒன்றிவரத் தொடுப்பது ________________.

அ. மோனை **ஆ. இயைபு**

இ. எதுகை ஈ. முரண்

10. யாப்பிலக்கணத்தின்படி எழுத்துக்களை ___________ பிரிப்பர்.

அ. இரண்டாய் **ஆ. மூன்றாய்**

இ. நான்காய் ஈ. ஐந்தாய்

**III.** பொருத்துக.

1. வெண்பா - அ. துள்ளல் ஓசை
2. ஆசிரியப்பா - ஆ. செப்பலோசை
3. கலிப்பா - இ. தூங்கலோசை
4. வஞ்சிப்பா - ஈ. அகவலோசை

| | | | |
|---|---|---|---|
| 1. ஆ | 2. ஈ | 3. அ | 4. இ |

## மொழியை ஆள்வோம்

**I. இரு தொடர்களை ஒரே தொடராக்குக.**

(எ.கா.): முத்து நன்கு படித்தான். முத்து வாழ்வில் உயர்ந்தான்.

முத்து நன்கு படித்ததால், வாழ்வில் உயர்ந்தான்.

**1. மழை நன்கு பெய்தது. எங்களால் விளையாட முடியவில்லை.**

மழை நன்கு பெய்ததால் எங்களால் விளையாட முடியவில்லை.

**2. எனக்குப் பால் வேண்டும். எனக்கு பழம் வேண்டும்.**

எனக்குப் பாலும் பழமும் வேண்டும்.

**3. திருமூலர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராய்க் கருதப்படுபவர். அவர் பதினெண் சித்தர்களுள் ஒருவராய்க் கருதப்படுபவர்.**

திருமூலர் அறுபத்து மூன்று நாயன்மார்களும் ஒருவராகவும், பதினெண் சித்தர்களுள் ஒருவராகவும் கருதப்படுவர்.

**4. அறநெறிகளைக் கூறும் நூல்களைக் கற்க வேண்டும். அவை கூறும் கருத்துகளைப் பின்பற்ற வேண்டும்.**

அறநெறிகளைக் கூறும் நூல்களைக் கற்று, அவை கூறும் கருத்துகளைப் பின்பற்ற வேண்டும்.

**5. குணங்குடி மஸ்தான் சாகிபு எக்காளக்கண்ணி நூலை இயற்றியுள்ளார். நந்தீசுவரக் கண்ணி நூலை இயற்றியுள்ளார்.**

குணங்குடி மஸ்தான் சாகிபு எக்காளக்கண்ணி நூலையும், நந்தீசுவரக் கண்ணி நூலையும் இயற்றியுள்ளார்.

Next Generation School

**II. கடிதம் எழுதுக.**

புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்கு கடிதம் எழுதுக.

**விழுப்புரம்,**
05.02.2020.

**அன்புள்ள மாமாவிற்கு,**

இலக்கியா எழுதிக்கொள்வது. நலம், நலமறிய ஆவல். நாங்கள் சென்ற வாரம் உங்கள் இல்லத்திற்கு வந்திருந்த போது தாங்கள் என்மீது செலுத்திய அன்பும் பாசமும் என்னை நெகிழச்செய்தன.

மேலும், அடுத்த வாரம் வருகின்ற எனது பிறந்த நாளுக்கு நான் விரும்பும் பரிசுப் பொருளைத் தாங்கள் வாங்கி அனுப்புவதாய்க் கூறியிருந்தீர்கள்.

அண்மையில், கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் எழுதி வெளியிட்டுள்ள **'தமிழாற்றுப்படை'** நூலினைப் படிக்க நான் ஆவலாய் இருக்கிறேன். தாங்கள் எனது பிறந்த நாள் பரிசாய் இந்நூலினை எனக்கு அனுப்பிவைத்தால் மிக்க மகிழ்வேன்.

அங்கே, இல்லத்தில் உள்ள அனைவருக்கும் எனது அன்பைத் தெரிவியுங்கள்.

**இப்படிக்கு,**
**தங்கள் அன்பான,**
**இலக்கியா**

**உறைமேல் முகவரி**

திரு. மா.புகழேந்தி அவர்கள்,
25, கம்பர் தெரு,
அய்யப்பன்தாங்கல்,
சென்னை.

# 6. திருக்குறள்

**I. சிறுவினா.**

**1. எது பெருமையைத் தரும்?**

காட்டுமுயலை வீழ்த்திய அம்பினை ஏந்துவதைவிட, யானைக்குக் குறிவைத்துத் தவறிய வேலை ஏந்துவது பெருமையைத் தரும்.

**2. நண்பர்களின் இயல்பை அளந்துகாட்டும் அளவுகோல் எது?**

நமக்கு வரும் துன்பமே நண்பர்களின் இயல்பை அளந்துகாட்டும் அளவுகோலாகும்.

**3. இவ்வுலகம் யாரால் இயங்குவதாய்த் திருக்குறள் கூறுகிறது?**

பண்பு உடைய சான்றோரின் வழியில் நடப்பதால்தான் இவ்வுலகம் இன்னும் இயங்குவதாய்த் திருக்குறள் கூறுகிறது.

**4. நட்பு எதற்கு உரியது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?**

நட்பு, சிரித்துப் பேசி மகிழ்வதற்கு மட்டும் உரியது அன்று; நண்பர் தவறு செய்தால் அவரைக் கண்டித்துத் திருத்துவதற்கும் உரியத என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆண்மையின் கூர்மை ____________.

அ. வறியவருக்கு உதவுதல் **ஆ. பகைவருக்கு உதவுதல்**

இ. நண்பனுக்கு உதவுதல் ஈ. உறவினருக்கு உதவுதல்

2. வறுமை வந்த காலத்தில் _______________ குறையாமல் வாழ வேண்டும்.

அ. இன்பம் ஆ. தூக்கம்

**இ. ஊக்கம்** ஈ. ஏக்கம்

3. 'பெருஞ்செல்வம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன _______________.

அ. பெரிய + செல்வம் ஆ. பெருஞ் + செல்வம்

இ. பெரு + செல்வம் **ஈ. பெருமை + செல்வம்**

4. 'ஊராண்மை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன _______________.

**அ. ஊர் + ஆண்மை** ஆ. ஊராண் + மை

இ. ஊ + ஆண்மை ஈ. ஊரு + ஆண்மை

5. திரிந்து + அற்று என்பனவற்றைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _______________.

அ. திரிந்தது அற்று **ஆ. திரிந்தற்று**

இ. திரிந்துற்று ஈ. திரிவுற்று

6. 'பேராண்மை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன _______________.

அ. பேர் + ஆண்மை ஆ. பெரிய + ஆண்மை

**இ. பெருமை + ஆண்மை** ஈ. பெரு + ஆண்மை

7. பெருக்கத்து வேண்டும் _______________.

அ. மகிழ்வு ஆ. உயர்வு

இ. தாழ்வு **ஈ. பணிவு**

8. 'பண்புடையார்' என்னும் சொல்லைப் பரித்து எழுதக் கிடைப்பன ________________.

**அ. பண்பு + உடையார்** ஆ. பண் + உடையார்

இ. பண்புடை + யார் ஈ. பண்பு + டையார்

9. பட்டு + உண்டு என்பனவற்றைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________________.

**அ. பட்டுண்டு** ஆ. பட்டுஉண்டு

இ. பட்உண்டு ஈ. பட்டுண்டு

10. "கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது"

-இக்குறளில் அமைந்துள்ள அணி

அ. உவமை அணி **ஆ. பிறிது மொழிதல் அணி**

இ. உருவக அணி ஈ. வேற்றுமை அணி

11. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

-இக்குறளில் அமைந்துள்ள அணி ________________.

அ. பிறிது மொழிதல் அணி ஆ. வேற்றுமை அணி

**இ. உவமை அணி** ஈ. எடுத்துக்காட்டு உவமை அணி

Next Generation School

**II.** பொருத்துக.

1. இன்பம் தருவது - நற்பண்பில்லாதவன் பெற்ற பெருஞ்செல்வம்

2. நட்பு என்பது - குன்றிமணியளவு தவறு


3. பெருமையை அழிப்பது - செல்வம் மிகுந்த காலம்

4. பணிவு கொள்ளும் காலம் - சிரித்து மகிழ மட்டுமன்று

5. பயனின்றி அழிவது - பண்புடையவர் நட்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 1. 5 | 2. 4 | 3. 2 | 4. 3 | 5. 1 |

**III.** படத்திற்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக.



கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

Next Generation School